# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur

Case No : C.C.No. 104/2020

Prosecution witness : **அ.சா.1** **Date : 24.03.2023**

| | |
|---|---|
| **Name : தங்கராஜ்** | Caste : SC |
| **Father's Name** : ராமசாமி | Calling : வெல்டிங் |
| Village : மேட்டூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 39 |

(A1, A3 present. A2 and A4 absent. Filed petition 317 CrPC and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் காவேரிகிராஸ் பொங்கியண்ணன் நகரில் குடியிருக்கிறேன். நான் வெல்டிங் வேலை செய்கிறேன். 03.11.2019 ந்தேதி மாலை 6.30 மணியளவில் நான் குளிப்பதற்காக எங்கள் வீட்டின் அருகில் தண்ணீர் காயவைத்துக்கொண்டிருந்தேன். அப்போது சேகரின் மூத்த மகன் மோகன்ராஜ் என்பவர் தடத்தில் போட்டிருந்த முள்ளை யாருடா எடுத்தது கண்டார ஓழி பையா, தேவடியா பையா என்று திட்டினார். அதற்கு கழிப்பிடத்திற்கு போவதற்காகதான் முள்ளை எடுத்தேன். ஏன் என்னை தகாத வார்த்தைகளால் திட்டுகிறாய் என்று கேட்டேன். அப்போது சேகர், ரமேஷ், ராமன் ஆகியோர் அங்கு வந்து எதற்காக முள்ளை எடுத்தாய் என்று சொல்லி ரமேஷ் என்பவர் கல்லை எடுத்து என் தலையில் குத்தினார். ரமேஷ் என் குரல்வளையை பிடித்து நசுக்கினார். அதனால் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு ரத்தம் என் உடம்பின் மீது வழிந்தது. அதன்பிறகு ராமன் என்பவர் கல்லை எடுத்து என் நெற்றியின் மீதும் மூக்கின் மீதும் அடித்தார். ரத்தம் உடல் முழுவதும் சொட்டியது. சேகர் என்பவர் என் கையின் மீதும் தலையின் மீதும் கையால் அடித்தார்.

2) இந்த சம்பவத்தை தடுக்க வந்த என் தம்பி மணிவண்ணன் எதற்காக என் அண்ணனை அடிக்கிறீர்கள் என்று எதிரிகளை கேட்டதற்கு நீ எதற்காக கேட்கிறாய் என்று எதிரி ரமேஷ் கல்லை எடுத்து என் தம்பியின் தலையில் அடித்தார். அவருக்கும் ரத்தக்காயம் ஏற்பட்டது. எதிரி மோகன்ராஜ் என்பவர் டேக்சாவால் என் தம்பியின் தலையிலும் முதுகிலும் அடித்தார். நாங்கள் இருவரும் சத்தம் போடவே அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். அதன்பிறகு எதிரி ரமேஷ் இன்றைக்கு தப்பித்து விட்டீர்கள் என்னைக்கிருந்தாலும் என் கையால்தான் உங்களை கொலை செய்யபோகிறேன் என்று மிரட்டிவிட்டு கல்லை கீழே போட்டுவிட்டு சென்று விட்டார். அதன்பிறகு என் உறவினர் சிவராஜ் என்பவர் எங்கள் இருவரையும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்து சிகிச்சையில் சேர்த்தார். மேட்டூர் போலிசார் இது சம்மந்தமாக மேட்டூர் அரசு மருத்துவமனையில் விசாரித்தபோது என்னால் பேசமுடியவில்லை. அதன்பிறகு சேலம் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றார்கள். 05.11.2019 அன்று மேட்டூர் போலிசார் விசாரித்தார்கள். அப்போது நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதி படித்து பார்த்தேன் சரியாக இருந்தது. என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **(புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (என்னிடம் காட்டப்படும் ஒடுங்கிய நிலையில் அலுமினிய பாத்திரம் சா.பொ.1, ஒழுங்கற்ற நிலையில் உள்ள கற்கள் இரண்டு சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** சான்று பொருட்கள் 1 மற்றும் 2 ஆகியவற்றால்தான்

எதிரிகள் என்னை அடித்தனர். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தனர். இன்று நீதிமன்றத்தில் எதிரிகள் சேகர், மோகன்ராஜ் ஆகிய இருவரும் ஆஜரில் உள்ளனர். மற்ற இரண்டு எதிரிகளான ரமேஷ் மற்றும் ராமன் ஆஜரில்லை.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

DEPOSITION OF WITNESS
In the Court of Judicial Magistrate No.I, Mettur

Case No : C.C.No. 104/2020
Prosecution witness : **அ.சா.2** **Date : 24.03.2023**

| | |
|---|---|
| **Name : மணிவண்ணன்** | Caste : SC |
| **Father's Name** : ராமசாமி | Calling : கூலி |
| Village : மேட்டூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 37 |

(A1, A3 present. A2 and A4 absent. Filed petition 317 CrPC and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் காவேரிகிராஸ் பொங்கியண்ணன் நகரில் குடியிருக்கிறேன். நான் வெல்டிங் வேலை செய்கிறேன். அ.சா.1 என்னுடைய அண்ணன். அ.சா.1 க்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே தட பிரச்சினை இருந்து வந்ததாக தெரிகிறது. 03.11.2019 ந்தேதி மாலை 6.30 மணியளவில் என் அண்ணன் குளிப்பதற்காக அவர் வீட்டின் அருகில் தண்ணீர் காயவைத்துக் கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரி மோகன்ராஜ் தேவடியா பையா என்றும் எதற்கடா முள்ளை எடுத்தீர்கள் எங்கள் பாட்டனுக்காக பிறந்தீங்க என்று திட்டினார். அங்கிருந்த எதிரிகள் அனைவரும் தங்கராஜை ஒன்று சேர்ந்து அடித்தனர். எதிரி ரமேஷ் என்பவர் கல்லால் தங்கராஜின் தலையில் அடித்தார். எதிரி ராமன் என்பவர் அ.சா.1 யின் மூக்கின் மீது கல்லால் அடித்துவிட்டார். எதிரி சேகர் என்பவர் அ.சா.1 ஐ கையால் முதுகின் மீது அடித்தார். ஏன் என் அண்ணனை அடிக்கிறீர்கள் என்று நான் சென்று கேட்டபோது என்னை எதிரி ரமேஷ் கல்லால் என் தலையில் அடித்துவிட்டார். எதிரி மோகன்ராஜ் என்பவர் டேக்சாவால் என் தலையிலும், முதுகிலும் அடித்துவிட்டார். நாங்கள் சத்தம்

போடவே அருகில் இருந்தவர்கள் வருவதை பார்த்துவிட்டு எதிரி ரமேஷ் என்பவர் அவர் கையில் வைத்திருந்த கல்லை காண்பித்து என்றைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். அதன்பிறகு சிகிச்சைக்காக எங்களை மேட்டூர் அரசு மருத்துவமனைக்க சேர்த்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தனர். நீதிமன்றத்தில் காட்டப்படும் சான்று பொருள் ஒன்று மற்றும் இரண்டு ஆகிவற்றால்தான் எதிரிகள் எங்களை தாக்கினார்கள். போலிசார் எங்களை சேலம் அரசு மருத்துவமனையிலும் பின்பு என்னுடைய வீட்டிலும் விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

DEPOSITION OF WITNESS
In the Court of Judicial Magistrate No.I, Mettur

Case No : C.C.No. 104/2020
Prosecution witness : **அ.சா.3** **Date : 24.03.2023**

| | |
|---|---|
| **Name : எலிசபத்ராணி** | Caste : SC |
| **Husband's Name :** தங்கராஜ் | Calling : கூலி |
| Village : மேட்டூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 35 |

(A1, A3 present. A2 and A4 absent. Filed petition 317 CrPC and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் காவேரிகிராஸ் பொங்கியண்ணன் நகரில் குடியிருக்கிறேன். நான் வீட்டில்தான் உள்ளேன். அ.சா.1 என்னுடைய கணவர். அ.சா.2 என் கொழுந்தனார். 03.11.2019 ந்தேதி மாலை 6.30 மணியளவில் என் கணவர் குளிப்பதற்காக வீட்டிற்கு அருகில் தண்ணீர் காயவைத்துக் கொண்டிருந்தார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே வழியில் நடப்பது சம்மந்தமாக பிரச்சினை இருந்து வந்தது. அங்கு வந்த எதிரி மோகன்ராஜ் என் கணவரை தகாத வார்த்தைகளால் பேசினார். அதற்கு முன்பாக என் கணவர் வழிதடத்தில் இருந்த முள்ளை எடுத்து ஓரமாக போட்டிருந்தார். எதிரி ரமேஷ் என்பவர் கல்லால் என் கணவரின் தலையில் அடித்துவிட்டார். மற்றும் என் கணவரின் கழுத்தை பிடித்து எதிரி ரமேஷ் நெறித்துவிட்டார். எதிரி ராமன் என்பவர் என் கணவரின் மூக்கு மற்றும் நெற்றியின் மீது கல்லால் அடித்துவிட்டார். எதிரி சேகர் எனது கணவரின் முதுகின் மீது கைகளால் அடித்தார். என் கொழுந்தனார் மணிவண்ணன் ஏன் என் அண்ணனை அடிக்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி ரமேஷ் அ.சா.2 யின் தலையின் மீது கல்லால் அடித்துவிட்டார். எதிரி மோகன்ராஜ்

டேக்சாவால் அ.சா.2 யின் முதுகின் மீது அடித்துவிட்டார். பின்பு உறவினர் சிவராஜ் என்பவர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். எதிரி ரமேஷ் என்பவர் கல்லை காண்பித்து என்னைக்கிருந்தாலும் என் கையால்தான் கொல்லுவேன் என்று சொல்லிவிட்டு கல்லை அங்கேயே போட்டு சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டுர்.**

# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur

Case No : C.C.No. 104/2020

Prosecution witness : **அ.சா.4** **Date : 24.03.2023**

| | |
|---|---|
| **Name : ரேவதி** | Caste : SC |
| **Husband's Name :** மணிவண்ணன் | Calling : - |
| Village : மேட்டூர் | Religion : இந்து |
| Taluk : மேட்டூர் | Age : 36 |

(A1, A3 present. A2 and A4 absent. Filed petition 317 CrPC and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் காவேரிகிராஸ் பொங்கியண்ணன் நகரில் குடியிருக்கிறேன். நான் வீட்டில்தான் உள்ளேன். அ.சா.1 என்னுடைய மச்சாண்டார். அ.சா.2 என் கணவர். எதிரிகள் எங்கள் வீட்டிற்கு பின்புறம் பாத்ரூம் செல்லும் வழியில் முள்ளை வெட்டி போட்டு வைத்திருந்தனர். அதை அ.சா.1 பாத்ரூம் செல்வதற்காக எடுத்து ஓரமாக போட்டிருந்தார். 03.11.2019 ந்தேதி மாலை எதிரி மோகன்ராஜ் என் கணவரை டேக்சாவால் என் கணவரின் தலையிலும் முதுகிலும் அடித்ததாக மருத்துவமனையில் நான் என் கணவரை சென்று பார்த்தபோது என்னிடம் சொன்னார். எதிரி ரமேஷ் என் கணவரின் தலையில் கல்லால் குத்தியதாக சொன்னார்.

2) எதிரி ரமேஷ் அ.சா.1 யின் தலையின் மீது கல்லால் குத்தி கழுத்தை நசுக்கியதாகவும், எதிரி ராமன் கல்லால் அ.சா.1 யின் மூக்கிலும், நெற்றியிலும் குத்தியதாக சொன்னார். எதிரி சேகர் அ.சா.1 ஐ கையால் முதுகில் அடித்ததாக சொன்னார். எதிரி ரமேஷ் என்பவர் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ பார்த்து என்னைக்கிருந்தாலும் உங்களை என் கையால்தான் கொல்லுவேன் என்று மிரட்டியதாக சொன்னார்கள். நான் மேட்டூர் அரசு

மருத்துவமனை சென்று அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ பார்த்தேன். பின்பு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**

DEPOSITION OF WITNESS
In the Court of Judicial Magistrate No.I, Mettur

Case No : C.C.No. 104/2020

Prosecution witness : **அ.சா.5** **Date : 24.03.2023**

| | |
|---|---|
| **Name : ராமசாமி** | Caste : SC |
| **Father's Name :** பெருமாள் | Calling : - |
| Village : மேட்டுர் | Religion : இந்து |
| Taluk : மேட்டுர் | Age : 60 |

(A1, A3 present. A2 and A4 absent. Filed petition 317 CrPC and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் காவேரிகிராஸ் பொங்கியண்ணன் நகரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 என் மகன்கள். ஆஜர் எதிரிகளை தெரியும். பாத்ரூம் செல்லும் வழியில் எதிரி மோகன்ராஜ் குடும்பத்தினர் முள்ளை வெட்டிபோட்டிருநதனர். அ.சா.1 பாத்ரூம் செல்வதற்காக அந்த முள்ளை எடுத்து போட்டுவிட்டு போயுள்ளார். எதிரி ரமேஷ் என்பவர் கல்லால் அ.சா.1 யின் தலையின் மீது குத்தினார். எதிரி ராமன் கல்லால் அ.சா.1 யின் மூக்கின் மீது குத்தினார். அ.சா.2 மணிவண்ணன் வந்து கேட்டபோது எதிரி ரமேஷ் கல்லால் அ.சா.2 யின் தலையின் மீது குத்தினார்.

2) எதிரி ராமன் கல்லால் அ.சா.2 யின் தலையின் மீது அடித்தார். எதிரி மோகன்ராஜ் டேக்சாவால் அ.சா.2 ஐ அடித்தார். எதிரிகள் நான்குபேரும் திட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். அதன்பிறகு இருசக்கர வாகனம் மூலம் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்து பின்பு மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு

மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்தோம். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**